REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மார்கழி 19உ செவ்வாய் (3-1-56) ★ ★ வெளியீடு: மார்கழி 20உ புதன் (4-1-56) [இதழ் 178

துங்கபத்திரா நதியில் பாலம் கட்ட ரூ. 26,17,000

மத்திய சர்க்கார் அனுமதிக்கிறது

தங்கபத்திரா நதியின்மீது பாலம் ஒன்று கட்டுவதற்கு மத்திய சர்க்கார் ரூ. 26 17,000 அனுமதித்திருக்கின்றனர் என்றும், இந்தப் பாலம் ஐதராபாத், சர்நூல் நகரங்களை இணைப்பதற்கு உதவும் என்றும் தெரியவருகிறது.

மேலும், இப்போது கிருஷ்ணா நதியில் கட்டப்பட்டுவரும் ஒரு பாலம் இந்த இரு நகரங்களையும் இணைக்கும் என்றும் தெரிகிறது.

1,000 கைவண்டித் தொழிலாளர் கண்ணீர்

சென்னை துறைமுக எல்லையில் வேலை தர நிர்வாகிகள் மறுப்பு

மூன்றுண்டுக் காலத் திட்டமாம்!

மந்திரிகளைக் காண முடியாது தொழிலாளர் தவிப்பு

சென்னை, ஜன. 2—

மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக, இந்த 1956-ம் ஆண்டு ஜனவரி முதல் தேதி முதல் துறைமுக எல்லைக்குள் கை வண்டிகளை அனுமதிப்பது இல்லை என்று முடிவு செய்தபடி, இன்று கை வண்டிகள் எதுவும் அனுமதிக்கப்படவில்லை.

சுமார் 1,000 பேருக்குமேல் வேலை தந்துவந்த 300 கை வண்டிகள், துறைமுகத்திற்கு வெளியே தேங்கிவிட்டன.

தங்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்பதைக் கண்ட கை வண்டித் தொழிலாளர்கள், மாட்டு வண்டிகளும் துறைமுகத்திற்குள் நுழையாமல் செய்துவிட்டனர்.

துறைமுகத்திற்கு வெளியே சில மணி நேரம் அமைதியாகக் காத்திருந்தும் தங்களுக்கு வேலை ஏதும் கிடைக்கவில்லை— தங்கள் கோரிக்கைகளும் கவனிக்கப்படவில்லை என்பதால், அந்த 1,000 கைவண்டித் தொழிலாளர்களும் கோட்டையில் உள்ள சர்க்கார் அலுவலகத்திற்கு ஊர்வலமாகப் புறப்பட்டனர்.

அங்கு முதன் மந்திரியைக் காண விரும்பிய அவர்கள்' முதன் மந்திரி இல்லாத காரணத்தால் தொழிலாளர் மந்திரி பக்தவத்சலத்தைச் சந்திக்க விரும்பினர்; ஆனால் அவரும் காஞ்சீபுரம் சென்றிருப்பதாக அறியவே அங்கு அவர்கள் சிறிது நேரம் தங்கள் கோரிக்கைகளை அதிகாரிகளிடத்தில் விளக்கி விட்டு, ஆர்ப்பாட்டம் நடத்தினர்; பின்னர் அமைதியாகக் கலைந்து சென்றனர் என்று தெரியவருகிறது

"துறைமுக எல்லைக்குள் கை வண்டிகள் புழங்குவதற்கு அனுமதி வழங்குவது இந்த ஆண்டு நிறுத்தப்பட்டு விட்டது; மூன்றுண்டுகளுக்கு முன் எடுக்கப்பட்ட முடிவாகும் இது;

"1953-ம ஆண்டில், 750 கைவண்டிகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டது; பின் ஒவ்வொரு ஆண்டும், மூன்றில் ஒரு பகுதியாகக் குறைத்துக்கொண்டே வருவது என்றும், 1956-ம ஆண்டில் கைவண்டிகள் எதுவும துறைமுகத்திற்குள் அனுமதிக்கப்படாமல் மறுத்து விடுவதெனவும் முடிவாகியது;

"இது குறித்து, கைவண்டித் தொழிலாளர்களுக்குப்போதுமான முன்னறிவிப்புக் தரப்பட்டிருக்கிறது; எனவே, இவர்கள் இந்த ஆண்டு தங்களுக்கு வேலை கிடைக்காது என்பதை அறிந்துகொண்டிருக்க வேண்டும்,"

என்று, துறைமுக டிரஸ்ட் அதிகாரிகள் கூறுகின்றனர்.

நான்காம் உலக யுத்தத்தில் கற்களே ஆயுதமாயிருக்கும்!

ஆக்ரா, ஜன. 2—

'மூன்றுவது உலகப் போருக்கு எவ்வித ஆயுதம் உபயோகிக்கப்படும்?' என்று, உலகப் பிரசித்தி பெற்ற விஞ்ஞான மேதை ஐன்ஸ்டீனை யாரோ கேட்டார்களாம்!

'மூன்றுவது உலகப் போரில் என்ன ஆயுதம் உபயோகிக்கப்படும் என்று எனக்குத் தெரியாது; ஆனால், நான்காவது உலக யுத்தத்தில் கற்களைத்தான் ஆயுதங்களாக உபயோகிக்கப்படக்கூடும்!'

என்று, ஐன்ஸ்டீன் பதிலளித்ததாக இந்திய விஞ்ஞானக் காங்கிரஸ் கூட்டத்தில் கே. எம். முன்ஷி பேசுகையில் கூறியுள்ளார்.

கலப்பு மணம் செய்ய முன்வரும் மாணவர்களுக்குப் பரிசு

ஜாதியை எதிர்க்க பீகார் மந்திரியின் முனைப்பு

கிரிதி, ஜன. 1—

பார்ப்பனன், புவுமியார், காயஸ்தன், யாதவர் அல்லது குமாரி—ஆகிய உயர் வகுப்புக்களைச் சேர்ந்த மாணவன், பிற்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த ஒரு யுவதியை மணந்துகொள்ள முன்வரும்பட்சத்தில், அதற்காக அம்மாணவனுக்குப் பரிசளிப்பது என்ற ஏற்பாட்டிற்காக கிரிதி கல்லூரிக்கு 3,000 ரூபாய்களை, பீகார் நிலவரி மந்திரி கிருஷ்ண வல்லபஷாயி தந்துள்ளார்

அதுபோன்றே, அரிசன அல்லது ஆதிவாசிக் குடி பிறந்த பெண்ணை மணக்க முன்வரும் மேற்குறிப்பிட்ட உயர் ஜாதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பரிசளிப்பதற்கு 5,000 ரூபாய்களை அதே அமைச்சர் நன்கொடையாகக் கொடுத்துள்ளார்.

நிலவரி அமைச்சரின் 58-வது பிறந்த நாளைக் கொண்டாடிய கிரிதி நகர மக்கள், அவரிடம் ரூ 58 000 கொண்ட பணமுடிப்பு ஒன்றை வழங்கினர்

அப்பண முடிப்பில் ரூ. 50,000-த்தை கிரிதி கல்லூரிக்கு நன்கொடையாகக் கொடுத்தார்; மீதமுள்ள தொகையை மேற்காட்டியவாறு, ஜாதி ஒழிப்புக்குச் செலவிடத் தந்தன்ளார்.

அகில மலாயா நாடு

உருவாக்க மலாயா மந்திரி யோசனை

சிங்கப்பூர், ஜன 1—

மலாயா, சிங்கப்பூர், பிரிட்டிஷ் வட போர்னியோ, புருனே, சரவாக் இவற்றை இணைந்த அகில மலாயா நாடு ஒன்றை அமைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், தான் லண்டன் செல்வதாயும், அங்கு நடத்தும் பேச்சுவார்த்தைகளின்போது இது குறித்தும் கலந்துபேசப்போவதாயும் மலாயா முதன் மந்திரி தெங்கு அப்துல் ரெஹ்மான் தெரிவித்திருக்கிறார்.

இந்த அகில மலாயா நாடு 1,80,000 சதுர மைல் பரப்பும், 85 இலட்சம் மக்கள் தொகையும் கொண்டு விளங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

சிறந்த புத்தகங்கள்

14 மொழிகளிலும் வெளிவரும்?

ஐதராபாத், ஜன. 2—

இந்தியாவின் 14 அரசாங்க மொழிகள் ஒவ்வொன்றிலும் சிறந்ததாயுள்ள சுமார் 250 புத்தகங்களை எல்லா மொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிடுவதற்கு சர்க்கார் உத்தேசித்துள்ளனரென்று மத்தியப் பாதுகாப்பு அமைச்சர் டாக்டர் கட்ஜு வரவேற்புக் கூட்டமொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்

நவீன குடிசைத்தொழில் வளர்ச்சியில் நிதி மந்திரி அலட்சியம்!

வானொலிப்பொறி, புகைப்படக் கருவி உற்பத்தி குறித்து ஜி. டி. நாயுடு விளக்கம்

சென்னை, ஜன. 2—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், சென்னையில் சில உபயோககரமான குடிசைத் தொழில்கள் துவக்குவது பற்றி தனது கருத்துக்களை எடுத்துரைப்பதற்காக விஞ்ஞான வித்தகரான கோவை-ஜி. டி. நாயுடு அவர்கள், இன்று சென்னை சர்க்கார் காரியாலயத்தில் மந்திரி சுப்பிரமணியம், மற்றும் தொழில் இலாகா அதிகாரி ஆகியோரைச் சந்திப்பதற்காகச் சென்றார்.

ரூ. 250 பெறுமான 'பாக்கெட் ரேடியோ' ஒன்றைத் தன்னால் 100 ரூபாயில் செய்துவிட முடியும என்று பத்திரிகையாளருக்கு அவர் விளக்கிக் காட்டினார்.

ஒரு நுண்ணிய புகைப் படம் பிடிக்கும கருவி ஒன்றையும் அவர் தயாரித்திருக்கிறார். அதைக் கொண்டு அவர், பத்திரிகையாளரைப் படம பிடித்தார்.

தமபிடி அளவில் புகைப் படம் பிடிக்கப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

அத்தகு சிறிய வானொலிப் பொறியையும், நுண்ணிய புகைப் படக் கருவிகளையும தயாரிக்க சென்னையிலேயே குடிசைத் தொழில்களைத் துவக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

5 வால்வ் வானொலிப் பெட்டிகளைத் தனது தொழிற்சாலையில் தான் தயாரித்திருப்பதாகவும், அவற்றை உள்ளூர்க் கடைகளில் விற்றிருப்பதாகவும் அவர் கூறினார்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

அமைச்சர் ஆசிரியராகிறார்

பெங்களூர், ஜன. 2—

அடுத்த மாதம் முதல், உயர் நிலைப்பள்ளி ஒன்றில், ஆசிரியராக உபரி வேலை பார்க்க மைசூர் முதன் மந்திரி முடிவு செய்துள்ளார்.

பம்பாய்க்கு அருகில் அணு உலையாம்!

நோக்கங்கள் பற்றி விளக்கம்

இந்தியாவிலேயே முதன் முதலாகப் பம்பாய்க்கு அருகில், ரூ 90 இலட்சம் செலவில் அணு உலை ஒன்று விரைவில் நிறுவப்படுமாம்

அணு உலை நிர்மாணிக்கப்பட்ட பிறகு மின்சாரம் முதலிய சக்திகளைத் தயாரிப்பதற்கு அணுசக்தியைப் பயன்படுத்த மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாமென்றும், இந்தச் சக்தியை நோயைக் குணப்படுத்தவும், பல்வேறு விதப் பருப்புகளையோ, காய்கறிகளையோ தயாரிக்கவும் பயன்படுத்தலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

மொராக்கோவில் மீண்டும் மனித வேட்டை

பெர்பெர் மக்கள் மீது பிரெஞ்சு இராணுவம் பாய்ச்சல்

பெஸ் (மொராக்கோ), ஜன. 1—

வடகிழக்கு மொராக்கோவில் பெர்பெர் என்ற மலைவாழ் மக்கள் மூன்று மாதங்களுக்குப் பிறது இப்போது மீண்டும் பொங்கி எழுந்திருக்கின்றனர்.

அவர்களது தேசிய எழுச்சியை ஒடுக்குவதற்காக, பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் பீரங்கிகள், விமானங்கள் முதலியனவற்றை அனுப்பி 58 தேசியவாதிகளின் உயிர்களைக் குடிக்கச் செய்திருக்கின்றனர்.

வெடிகுண்டுத் தாக்குதலினால் பலர் படுகாயமுற்றிருக்கின்றனர்; இருவர் சிறைப் பிடிக்கப்பட்டனராம்.

இந்த பெர்பெர் மக்கள்தான் மூன்று மாதங்களுக்குமுன் பிரெஞ்சு இராணுவ முகாம்களுக்குள் புகுந்து வெள்ளையர் பலரைத் தாக்கினர் என்பது நினைவிருக்கலாம்.

இப்போது நான்கு பிரெஞ்சு இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதாயும், ஆறு பேர் காயம் பட்டதாயும், ஒருவர் காணப்படவில்லை என்றும் கூறப்பட்டது.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 3-1-'56 செவ்வாய்

திராவிடரை அழைக்கிறோம்!

நாட்டு விடுதலை கோரும் ஒரு தேசிய இயக்கம் என்று பிரகடனப்படுத்தப்படுவதற்கு ஒரு கட்சி அல்லது கழகத்திற்கு என்னென்ன இலக்கணங்கள் இருக்கவேண்டும் என்று நல்லறிவாளரால், உலக வரலாற்றில் விடுதலை வீரர்கள் என்ற பட்டியலை நிரப்புவோரால் கூறப்படுகிறதோ அந்த இலக்கணங்கள் அத்தனையையும் பெற்று விளங்குகிறது, திராவிட முன்னேற்றக் கழகம் என்ற உண்மையை, மாற்றுரும் மறுத்துவிட எண்ணமாட்டார்கள் — நமது கழகத்தின் இன்றைய மகத்தான வளர்ச்சியைக் கண்ட பிறகும்!

'விடுதலை' என்ற சொல்லுக்கு உலக நல்லோர் இது வரை வரையறுத்துத் தெளிவுபட விளம்பியிருக்கும் முழுப் பொருளுடன் கூடிய விடுதலை, திராவிட இன மக்களுக்கு இன்றைய 'ஏக இந்திய' அரசியல் அமைப்பில் கிடைக்கவில்லை என்ற பேருண்மையை இன்று உணர மறுக்கும் அல்லது உணர்ந்தும் ஒப்ப மறுக்கும் 'அகில இந்தியா'க்களுக்கு, குறுகிய எதிர்காலம் முகத்தில் அறைந்து உணர்த்த விருக்கிறது — ஒப்பச் செய்யப் போகிறது, நிர்ப்பந்தமாக!

'இதோ உன் திராவிடத் திருநாடு; இதோ உன் இனப் பண்பாடு' என்று, கடந்தகால வரலாறும் — இலக்கியமும், நிகழ்கால வாழ்வு முறையும் இடித்துரைத்தும், நடைமுறை அரசியல் அமைப்பு அந்த உரைக்கு உரை கல்லாய் அமைந்து, 'தென்னாடு — வடநாடு', 'திராவிடம் — பாரத வர்ஷம்' என்ற வேறுபாட்டை எடுத்துக்காட்டியபின்பும், 'திராவிடநாடு திராவிடர்க்காகவேண்டும்' என்ற உணர்வு பெறாத தென்னாட்டு 'அகில இந்தியா'க்களின் பொது வாழ்க்கை நோக்கத்தின் நேர்மையையே திராவிட மக்களில் தீவிரவாதிகளாக விருப்போர் சந்தேகிக்கத்தான் செய்வர்.

தென்னாட்டில், வடநாட்டவரின் எடுபிடிகளாயுள்ளவர்கள் 'ஏக இந்தியா' என்ற ஏகாதிபத்திய அரசியல் அமைப்பை ஒரு விடுதலைபொடுகூடிய ஜனநாயக அரசியல் அமைப்பு என்று நிலைநாட்டுவதற்காக மேற்கொள்ளும் கற்பிதமான நடைமுறைக்கு முரண்பட்ட பிற்போக்கு வாதங்கள், 'தன்னுடைய நாடு எது? தன்னுடைய பண்பாட்டுச் சிறப்பு என்ன என்பதையே இவர்கள் தெரிந்து கொள்ளவில்லையே' என்ற நம் நகைப்பிற்குத் தீனியாக அமைகின்றனவே தவிர, நமது இலட்சியம் — 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற முழக்கம் — தவறானது என்பதை நிரூபிக்கத் தகுதியற்றனவாக உள்ளன.

ஏழாம் ஆண்டில் எழில் நடை போடும் தி. மு. கழகத்தின் குன்றாத நித்திய வளர்ச்சி இதற்குச் சான்று பகரும்.

'வடநாடு — தென்னாடு' என்று 'இந்தியா'வைப் பிரித்துப் பேசுவது தங்களுடைய மித் தெளிவான பலவீனத்தை வெளிக்காட்டுவதாகும் என்பதைத் தெள்ளென உணர்ந்திருந்தும், வடநாட்டு ஏகாதிபத்திய மூலவர்கள், 'வடநாடு — தென்னாடு' என்று பிரித்துப் பேசவேண்டிய நிர்ப்பந்தமான சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டு, தங்களது தென்னாட்டு எடுபிடிகளை இன்னும் நம்பிக்கொண்டிருப்பது 'பேதமை' என்ற சுய உணர்வு பெற்றவர்களாய், 'தென்னாடு — வடநாடு' என்ற இரு நாடுகளுக்கிடையேயும் உள்ள பல துறைப் பெரும் பிளவை இணைத்து வைத்திருக்கும் 'இந்தியாவின் அரசியல் ஒற்றுமை' என்ற உடைந்து வரும் பாலத்தைச் செப்பனிட முற்பட்டிருக்கிறார்கள் — நேரிடையாக!

'அரசியல் ஒற்றுமை' போதுமானதல்ல; உணர்வுபூர்வமான ஒற்றுமை வேண்டும்; இருக்கிற வேற்றுமைகளை விட்டொழியுங்கள்; 'ஒற்றுமை'யை உறுதி செய்யுங்கள் — என்று உபதேசம் புரிகிறார்கள். 'பாலத்தைத் தகர்ப்பதற்கு அனுமதியோம்' என்று கொக்கரிக்கிறார்கள்; பாலம் உடைந்து வருகிறதே என்று ஓலமிடுகிறார்கள்.

வடவரின் உபதேசம் கண்டு திராவிடர்கள் சிரிக்கிறார்கள்; கொக்கரிப்புக் கண்டு கெக்கலிக்கிறார்கள்; ஓலம் கண்டு பரிதாபப்படுகிறார்கள்.

வடவரின் ஆதிக்கப் பிடியிலிருந்து விடுதலை கோரி விழிப்புப் பெற்றிருக்கும் திராவிட இன மக்கள் தங்களின் உற்ற துணைவனாய், ஏற்ற வழிகாட்டியாய், ஆற்றல்மிகு வீரனாய் ஆக்கிவைத்திருக்கும் தி. மு. கழகம், வடவரின் ஏகாதிபத்தியப் பிடிப்பிற்கு எதிராக, வேகமாகத் தட்டிக் கொண்டிருக்கும் விடுதலை முரசின் ஒலியை, போர்ப் பறையின் முழக்கத்தை இன்னமும் தூங்கிக்கொண்டிருக்கும் திராவிடத் தோழர்களை எழுப்பிக் கேட்கச் செய்ய வேண்டிய நேரம் இது தான். ஆம்; தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அறிக்கை விடுத்திருக்கிறார் — கழகத்திற்கு உறுப்பினர் சேர்க்கும் காலம் குறித்து.

தி. மு கழகம்தான், திராவிடரின் விடுதலையோடுகூடிய நிரந்தரமான நல்வாழ்க்கைக்காகப் போராடிவரும் வீரர் கோட்டம். அந்த வீரர்களின் அணி, தேவையான அளவிற்கு — அளவிலும், ஆற்றலிலும் சிறந்து விளங்க எடுத்துக்கொள்ளும் காலத்தைப் பொறுத்துத்தான், திராவிடம் விடுதலைபெறும் நாள் கணிக்கப்பட முடியும்.

ஏற்கனவே உறுப்பினராயுள்ளோர் தங்கள் தகுதியைப் புதுப்பித்துக்கொள்ளவும், ஆர்வத்தால் உந்தப்பட்டு, கொள்கையால் ஈர்க்கப்பட்டு, இலட்சியத்தால் கவரப்பட்டு, கழகத்தில் இடம் பெறத் துடிப்போர் உறுப்பினராகவும் காலந்தாழ்த்தாது இந்தத் திங்கள் இறுதிக்குள் முற்பட்டுவிட வேண்டும்.

கழகத் தோழர்கள், கழகத்தின் இது முக்கிய பணிகளை... சேர்க்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம்; என்றாலும், விளக்கிற்குத் தூண்டுகோல் அவசியமல்லவா என்பதால் எழுதுகிறோம்.

தோழர்கள் உறுப்பினர் தொகையைப் பெருக்கி, கிளைகளைத் தோற்றுவித்து, கழகத்தின் வலிவையும், பொலிவையும் மிகுவிக்க வேண்டுகிறோம்.

தி. மு. கழகம் வளர, அதன் அறிவு சிறக்க, ஆற்றல் செழிக்க உறுப்பினர் தொகையைப் பெருக்குவீர்; இலட்சியம் ஈடேற, பகைவர் மருள, மாற்றார் மனங்கவர, மக்கள் மகிழத்தக்க அளவில் கழக உறுப்பினர் கணக்கை விரிவாக்குவீர்களாக!

நாடும், மொழியும் மீளவும், திராவிடர் வாழ்வாங்கு வாழவும், விடுதலை மலரவும், ஜனநாயகம் தழைக்கவும், தி. மு. கழகத்தில் உறுப்பினராகச் சேருவீர் என்று திராவிடரை அழைக்கிறோம்.

ஊழியர்களின் சம்பள விகிதம் நிர்ணயம்

சென்னை சர்க்கார் முடிவு

சென்னை, ஜன. 1—

எண்ணெய் மில், நெல் அரைக்கும் மில், மாவு மில், பருப்பு மில் ஆகியவற்றில் பணியாற்றும் சிப்பந்திகளின் குறைந்தபட்ச சம்பளத்தை சென்னை சர்க்கார் திருத்தியுள்ளனர். இந்தப் புதிய சம்பள விகிதங்கள் 1956 ஜனவரி 1-ந் தேதி முதல் அமுலாகிறது. குறைந்தபட்சக் கூலி நிர்ணயச் சட்டத்தின்கீழ் சர்க்கார் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

'1957-ல் மலேயா சுதந்திரம் பெற்றுவிடும்'

லண்டன் செல்லும் முதல் மந்திரி உறுதியான நம்பிக்கை

சிங்கப்பூர், ஜன. 1—

வரும் 1957-ம் ஆண்டில் மலேயாவிற்குச் சுதந்திரம் கிடைத்துவிடும் என்றும், அந்தக் காலவரையறை குறித்து பிரிட்டன் ஒப்புதல் தரும் என்றும் தான் முழுமனதுடன் நம்புவதாக மலேயாவின் முதன் மந்திரி தெங்கு அப்துல் ரெஹ்மான் கருத்தறிவித்திருக்கிறார்.

மலேயா சுதந்திரம் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக லண்டன் செல்லும் வழியில் அவர், இங்கு வந்தபோது மேலும் கூறினார்:—

"இந்த வேலையைச் செய்ய நான தவறினால் மக்கள் என்னைப் பதவியிலிருந்து துரத்தி விடுவார்கள். 'முதுகெலும்பில்லாத தலைவன்' என்று என்னைத் தூற்றுவதற்கு அவர்களுக்கு உரிமை கிடைத்துவிடும்."

முதன் மந்திரி ரெஹ்மானுடன் சிங்கப்பூரின் இதர மூன்று மந்திரிகளும், 'சுதேச சமஸ்தானங்களின்' பிரதிநிதிகளாக நால்வரும் உடன் செல்கிறார்கள். அவர்கள் கொழும்பு — கராச்சி வழியாக, சனவரி 18-ந் தேதியன்று லண்டன் சேர்ந்து அங்கு, பிரிட்டிஷ் காலனி மந்திரி ஆலன் லெனாக்ஸ் பாயிட், மற்றும் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவர்.

தனது கட்சியின் செயற் குழுக் கூட்டத்தில் நேற்று முன்தினம் பேசிய ரெஹ்மான், மலேயா சுதந்திரம் கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப் பட்டுவிட்டதாகவும், மலேயா சர்க்காரிடம் சில நிர்வாக விவகாரங்களை ஒப்படைப்பது பற்றிய விவரங்கள் குறித்துத் தான் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட விருப்பதாயும் தெரிவித்திருக்கிறார்.

கம்யூனிஸ்டுகளை வேட்டையாட ஆஸ்திரேலியத் துருப்புகளாம்!

சமரச ஏற்பாடு முடிவின் எதிரொலி

கோலாலம்பூர், ஜன 1—

மலேயா கம்யூனிஸ்டுத் தலைவர் சின்பெங்குடன் மலேயா சர்க்கார் நடத்திய சமரசப் பேச்சு வார்த்தைகள் முடிவுற்றதை ஒட்டி, கம்யூனிஸ்டுப் புரட்சிக்காரர்களை வேட்டையாடுவதற்காக ஆஸ்திரேலிய இராணுவத்தினர் ஏவி விடப்பட்டிருக்கின்றனரெனத் தெரிய வருகிறது.

மலேயாவில் கம்யூனிஸ்டுகளைப் பிடிப்பதற்கு, இப்போதுதான் முதன் முதலாக ஆஸ்திரேலியத் துருப்புகள் அனுப்பப்படுகின்றனவாம்.

காடுகளில் கூடாரமடிக்கத் துவங்கிவிட்டனராம் — அந்த ஆஸ்திரேலிய இராணுவத்தினர்!

விமானங்கள் நோட்டம் பார்க்கின்றன என்றும், துருப்புகள் துப்பாக்கிகளில் வெடிமருந்துகளைத் திணிக்கின்றன என்றும் செய்திகள் கூறுகின்றன.

ரூ. 29,58,000 செலவில்!

'அம்பர் சர்க்கா' பரிசீலனைத் திட்டம் ஆரம்பமாம்!

புதுடில்லி, ஜன. 2—

அம்பர் சர்க்காவின் சக்தி பற்றிய தகவல்களைச் சேகரிப்பதற்காகவும், இதில் உற்பத்தி செய்யப்படும் நூலைப் பற்றி நெசவாளர்களின் கருத்துக்களைத் தெரிந்து கொள்ளுவதற்காகவும் ஒரு முன்னேட்டத் திட்டத்துக்கு இந்திய சர்க்கார் அனுமதியளித்துள்ளனர். இத்திட்டம் இப்பொழுது அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

அ. இ. கதர், கிராமத் தொழில் போர்டால் தயாரிக்கப்பட்ட இத்திட்டத்தை நிறைவேற்றி வைப்பதற்காக ரூ. 29,58,000-க்குச் சற்று அதிகமான தொகை அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

இந்த முன்னேட்டத் திட்டத்தை நிறைவேற்றி வைப்பதின் மூலம், சர்க்காக்கள் 6,000; கருவிகள், சாதனங்கள் முதலியனவும், ரூ. 12 இலட்சம் மதிப்புக்குத் துணியும் உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்; இது தவிர, பயிற்சி பெற்ற போதனாசிரியர்கள் 400 பேர்களும் பயிற்சி பெற்ற சேவையாளர்கள் 15,000 பேர்களும் இருப்பார்களாம்!

இரண்டாம் திட்ட மதிப்பு ரூ. 7,100 கோடி

ரூ. 450 கோடி புது வரி விதிப்பாம்!

புதுடில்லி, ஜன. 1—

திட்டக் குழுவினர் முன்பு அறிவித்திருந்ததற்கு மாறாக, இரண்டாம் திட்டத்திற்கான நிதி சேகரிப்பில் ரூ. 1,200 கோடி துண்டு விழும் என்று அறிவிக்கப்படுகிறது. முன்பு ரூ 1,000 கோடிதான் பற்றாக்குறையாக இருக்குமெனக் கூறப்பட்டது.

திட்டத்திற்கு நிதி திரட்டுவதற்காகக் கூறப்பட்டுள்ள வழிகளுள் ரூ. 450 கோடி வரை புதிய வரிகள் விதிக்கலாம் என்பதையும் ஒன்றாகத் திட்டக்குழு தெரிவித்திருக்கிறதாம்.

திட்டத்தின் மூலம் 80 இலட்சம் பேருக்குப் புதிதாக வேலை கிடைக்கும் என்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

பொதுத் துறையில் — சர்க்கார் துறையில் ரூ. 4,800 கோடியும், தனியார் துறையில் ரூ. 2,300 கோடியும் செலவிட இறுதியாக முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

புதிய நாணயமுறை சிறந்ததாம்!

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

யும், சிரமங்களையும் சரிக்கட்டத்தக்க நடவடிக்கைகளைப் புதிய நாணயமுறை அமுலுக்கு வருவதற்கு முன்கூட்டியே செய்துவிட்டால் மிக நலமாக இருக்குமாம்.

முதலில் சிரமங்களிருந்தாலும், இந்த தசாம்ச நாணய முறையால் பின்னர் நல்ல பலன்கள் கிட்டும் என்பதில் சந்தேகம் இல்லையாம்!

முகத்தல் அளவைகள், நிறுத்தல் அளவைகளிலும் கூடிய சீக்கிரம் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு ஒருமை ஏற்படும்படி செய்வது மிக அவசியமாகுமாம்; அதற்கான முயற்சிகளும் நாளாவட்டத்தில் செய்யப்படுமாம்!

சூடானில் விடுதலைக் கொடி ஏற்றம்

56 ஆண்டுகால கூட்டாட்சி ஒழிந்தது

கார்தூம், ஜன. 1—

சூடான், கடந்த 56 ஆண்டுகளாக ஆங்கிலோ — எகிப்திய ஆட்சிக்குட்பட்டிருந்த நிலைமாறி, விடுதலை பெற்று, குடியரசாக இன்று மலர்ந்திருக்கிறது.

கவர்னர் — ஜெனரலின் மாளிகையில் பறந்து கொண்டிருந்த பிரிட்டிஷ் — எகிப்தியக் கொடிகள் கிழிறக்கப்பட்டு, புதிய மூவர்ணக் கொடி — சூடான் சுதந்திரக் கொடி பறக்கவிடப்பட்டது.

சூடான் சுதந்திரத்தை அங்கீகரித்துப் பிரிட்டன், எகிப்து நாடுகள் அனுப்பிய கடிதங்கள், கொடியேற்றப்படுவதற்கு முன்பாக மக்கள் சபைக் கூட்டத்தில் படித்துக் காட்டப்பட்டன.

நாட்டின் தலைமைப் பொறுப்பிற்கு 5 பேர் அடங்கிய குழு ஒன்று பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டது.

பின்னர், பிரதமர் இஸ்மெயில் எல் அஜாரி, மற்றும் மக்கள் சபைத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர். கவர்னர்-ஜெனரலின் மாளிகைக்கு மக்கள் சபை உறுப்பினர்களை ஊர்வலமாக அழைத்துக்கொண்டு சென்றனர்.

சர் நாக்ஸ் ஹெல்ம் என்ற கவர்னர்-ஜெனரல் டிசம்பர் மத்தியில் தனது 'ராஜிநாமா'வை அறிவித்திருந்தார்

"சூடான் சுதந்திரக் குடியரசாக மலருவதற்குத் துணை

(4-ம் பக்கம் பார்க்க)

புயல்-வெள்ள நிவாரண நிதி

ஆமதாபாத் தமிழர்கள் கூட்டு முயற்சி

தி. மு. கழகத் தோழர்கள் முன்னிற்கின்றனர்

ஆமதாபாத் நகர தி. மு. கழகத் தோழர்கள், தென்னகத்தில் ஏற்பட்ட புயல், வெள்ளக் கொடுமையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் தேடித் தருவதற்காக இதர கட்சியினரையும் கூட்டுச் சேர்த்து குழு ஒன்று அமைத்து, ரூ. 5,000 வரை திரட்டுவதென முடிவு செய்து வேலை செய்து வருகின்றனர்.

இதுவரை ரூ. 3,000 வசூலாகியிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

குழு அமைக்க வேண்டிய தன் அவசியம் குறித்து நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் தணிகாசலம், கடந்த டிசம்பர் 12-ல் அறிக்கை ஒன்று விடுத்து, எல்லாப் பொது நிறுவனங்களும் 18-ந் தேதியன்று கிருஷ்ண தமிழ் வித்தியாலயத்தில் கூடுமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார். அதற்கொப்ப தி.மு. கழகம், கிருஷ்ண தமிழ் வித்தியாலயம், பாரதி தமிழ் வாசகசாலை, தென்னிந்திய வாலிபர் சங்கம், முத்தமிழ் நாடக மன்றம், மறுமலர்ச்சி நாடக மன்றம், கிருஷ்ண கான நாடக சபா ஆகிய பொது நிறுவனங்களின் பிரதிநிதிகளும், இதர பலரும் கூடி தோழர் சுப்பையா அவர்களைத் தலைவராகவும், தோழர் வே. தாண்டவராயன் அவர்களைச் செயலாளராகவும், தோழர் சதாசிவம் அவர்களைப் பொருளாளராகவும் கொண்டு, மற்றும் 52 பேரடங்கிய நிதி வசூல் குழு ஒன்று அமைக்கப்பட்டது. குழுவில், நமது தி. மு. கழகத் தோழர்கள் பலரும் இடம் பெற்று, தீவிரமாக வசூலில் முன்னின்று பணியாற்றி வருகின்றனர்.

வடநாட்டில் உள்ள ஆமதாபாத்தில் வதியும் திராவிடர்கள்-தமிழ் மக்கள், தங்களது தாய் நாட்டு மக்களின் துயர் துடைக்க ஒரு நாள் ஊதியத்தைத் தர வேண்டுமென குழுவினர் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

சென்னை 37-வது வட்ட தி. மு. கழகம்

18—12—55 காலை 11 மணியளவில், கழகச் செயலாளர் தோழர் நெடுமாறன் தலைமையில் கழகத் தோழர்களும், ஆல்தோட்டம் கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பகத்தினரும், அவ்வட்டத்தில ஊர்வலமாகச் சென்று ரூ 24—0—7-ம், 65 துணிகளும், 12½ படி அரிசியும் திரட்டினர்.

குன்னத்தூர் தி.மு. கழகம்

குன்னத்தூர் தி மு கழகத் தோழர்கள் ரூ 97—12—6-ம், 40 துணி உருப்படிகளும் வசூலித்தனர்.

திருமகள் ஆலைத் தொழிலாளர் நன்கொடை

குடியேற்றம் திருமகள் ஆலைத் தொழிலாளர்கள் ஆண்—பெண்கள் தலா ரூ. 1 வீதம் ரூ 614-ம், குமாஸ்தாக்கள் ரூ 118-ம, மேஸ்திரிகள், காவற்காரர்கள் ரூ 76-ம, ஆக ரூ 808 திரட்டி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்கொடையாகத் தந்தனர்

கிராம முன்னேற்றக் கழக நிவாரண நிதி

நெல்லை மாவட்டம் கொம்பன்குளம் கிராம முன்னேற்றக் கழக இலங்கை கிளையின் சார்பில் தமிழகப் புயல், வெள்ளக் கொடுமைகளுக்கு ஆளாகித் தவிக்கும் மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காகக் கிளையின் சார்பில் ரூ 75 நிதி திரட்டப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சித்தேரி விவசாயிகள் சங்க நன்கொடை

குரும்பேரி கிராமத்தில் 27—12—55 இரவு விவசாயிகள் சங்கச் சார்பில் உழவன் கலைக் குழுவினர் 'தூக்குமேடை' நாடகம் நடத்தி, அதன் மூலம் வசூலான தொகை ரூ. 111—11—11-யும் நிவாரண நிதிக்கென அனுப்பி வைத்தனர்.

பெரியகுளம்

தி. மு கழகச் சார்பில், செயலாளர் ஏ. எஸ் அனீபா தலைமையில் கழகத் தோழர்கள் மூன்று நாட்கள் நிதி திரட்டினர் உண்டியல் மூலம் ரூ 125—10—6-ம், அரிசி 17½ படியும். நெல் 10 படியும், இதர தானியங்கள் 8 படியும் (பருப்பு, புளி மிளகாய் முதலியன) ஆடைகள் 250-ம் கிடைத்தன.

பெரியகுப்பம்

பகுத்தறிவு மன்றத் தோழர்களும், மற்றவர்களும் தோழர் பி நாராயணன் தலைமையில் புயல் நிவாரண நிதிக்காக ரூ. 100-14-9 திரட்டி, அரசாங்க நிவாரண நிதிக்கு அனுப்பி வைத்தனர்.

செயங்கொண்ட சோழபுரம்

27—12—55 மாலை தி மு கழகத் தோழர்கள், செயலாளர் ச. இளசாகம் தலைமையில் வேடங்கள் பல தாங்கி, நிதி திரட்டினர். துணி, பணம் அனுப்பும் செலவு போக மீதி ரூ 82—1—0-ம, 21 மரக்கால் அரிசியும், 10 புது வேட்டி துண்டுகளும் புயல் நிதிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

நிலச் சீர்திருத்தத்தில் மூன்றும் கட்டம்

மந்திரி மாணிக்கவேலர் விளக்கம்

ஈரோடு, டிச. 30—

"நிலச் சீர்திருத்தத்தில் மூன்றுவதும் கடைசிக் கட்டமுமாக, 'நிலம் உழுபவருக்கே' என்ற கொள்கையை ஏற்றுக்கொள்வது—ஒருவர் உயர்ந்தபட்சம் எவ்வளவு நிலம் வைத்துக் கொள்ளலாம் என்று நிர்ணயிப்பது-உபரிநிலத்தை நிலமில்லாத விவசாயிகளுக்குப் பிரித்துத் தருவது-என்பதாகத்தான் இருக்கும்,"

என்று, ரெவினியூ மந்திரி மாணிக்கவேலர் காங்கிரஸ் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

முதல் கட்டத்தில், குடியானவர்களுக்கு சட்ட ரீதியான பாதுகாப்புத் தரப்பட்டது; இரண்டாம் கட்டத்தில், உழுபவருக்கும்-நிலச் சொந்தக்காரருக்கும் குடிவாரப் பிரிவினை நிர்ணயம் செய்யப்பட்டது.

மூன்றாவது கட்டம் சில சட்ட சிக்கல்களைக் கொண்டதாயிருப்பதால், மத்திய சர்க்காருடன் கடிதப் போக்குவரத்து நடத்திக் கொண்டிருக்கிறது சென்னை சர்க்கார் என்றும் மாணிக்கவேலர் பேசியிருக்கிறார்

மத்திய பாரத் மாநிலம் முன்னேறுவதற்கு திட்டம்

ரூ. 48 கோடி செலவில் 'வளமான வாழ்வு' காண முயற்சி

11 இலட்சம் ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி கிடைக்க வடநாட்டில் திட்டம்

விவசாயம், தொழில் துறை முதலிய இரு உற்பத்தித் துறைகளிலும் அபிவிருத்தி காண்பதற்கு இந்தியாவின் பல பகுதிகளில் பல நோக்கு அணைக்கட்டுத் திட்டங்களும், பாசனத் திட்டங்களும், மின்சாரத் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இத்துறையில் மத்திய பாரத் மாநிலம் திட்டப்படி முன்னேற்றமடைந்து வருகிறது.

மத்திய பாரத் மாநில பரப்பளவு 46,478 சதுர மைல்; மக்கள் தொகை சுமார் 80 இலட்சம்.

அம்மாநிலத்தில் துணி ஆலைகள், சர்க்கரைத் தொழிற்சாலைகள், சிமிட்டித் தொழிற்சாலைகள் எண்ணெய் ஆலைகள், பிஸ்கட்-மிட்டாய் தயாரிப்புச் சாலைகள் முதலியவை பிரதான தொழில்களாக இருக்கின்றன

ஐந்தாண்டுத் திட்ட காலம்

ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பமானவுடன் மத்திய பாரத் மாநிலம் மின்சார உற்பத்தியில் தீவிர கவனம் செலுத்த ஆரம்பித்தது அதற்குப் பிறகு நல்ல முன்னேற்றமும் ஏற்பட்டிருக்கிறது முதல் திட்ட கால இறுதியில் ஐந்து பங்கு அபிவிருத்தி ஏற்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நீர் மின்சார உற்பத்திக்கும் திட்டமிடப்பட்டிருக்கிறது 'சம்பல் நீர் மின்சார உற்பத்தித்திட்ட' வேலை நடந்துவருகிறது.

சம்பல் நதியும், சம்பல் திட்டமும் மத்திய பாரத், இராஜஸ்தான், ஆகிய இரு மாநிலங்களுக்கும் பயன் உள்ளவை.

ரூ 48 கோடி மதிப்புள்ள சம்பல் திட்டத்தின் முதல் கட்டப்படி செளராசிகார், காந்தி சாகர், கோட்டா ஆகிய மூன்றிடங்களில் அணைகள் கட்டப்படும். இத்திட்டம்மூலம் 11 இலட்சம் ஏக்கரா நிலத்துக்குப் பாசன வசதி கிடைக்கும்; 69,000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தியாகும்.

காந்தி சாகர் அணைவேலை நன்கு முன்னேறி வருகிறது. 1960-ல் அதன்மூலம் மின்சார உற்பத்தி சக்தி கிடைக்கத் துவங்கும்.

இந்தோர்—உஜ்ஜெயின் முதலிய பகுதிகளுக்கு மின்சாரம் சப்ளை செய்வதற்காக ரூ 176 இலட்சம் செலவில் மூன்று திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. 1955 மார்ச் வரையில் ரூ. 158 இலட்சம் செலவிடப்பட்டிருக்கிறது. இத்திட்டங்கள் சம்பந்தமான வேலை தீவிரமாய் நடந்துவருகிறது 1955—56-ல் உற்பத்தி நிலையங்கள் வேலை துவங்கிவிடும் இந்தோரில் 3 000 கிலோவாட் உற்பத்தி இயந்திரமும் நீராவி பாய்லர்களும் மத்திய நீர் மின்சாரக் குழுவால் ஏற்படுத்தப்பட்டன. 1953ல் அந்நிலையம் வேலை துவங்கியது.

கிராமாந்தர மின்சார வசதி

மத்திய பாரத்தில், கிராமாந்தர மின்சார வசதி பரவலும் முக்கியத் திட்டமாக இருக்கிறது இதற்காக ரூ 17 இலட்சம் செலவில் இரு இடங்களில் டீசல் இயந்திரங்கள் உள்ள நிலையங்கள் ஏற்படுத்தப்படும் 1951-54 கால அளவில் ரூ 9 இலட்சம் செலவிடப்பட்டிருக்கிறது. வேலை தீவிரமாய் நடந்துவருகிறது.

மேலே கூறப்பட்ட திட்டங்கள் தவிர வேறு ஐந்து திட்டங்களும் தீவிரமாய் நடந்துவருகின்றன

இத்திட்டங்களும், சம்பல் திட்டமும் பூர்த்தியானபின், மத்திய பாரத்தில 28,000 கிலோவாட் சக்தி உற்பத்தியாகும். நபர் ஒருவருக்கு சராசரி 6 'யூனிட்' வீதம் மின்சாரம் கிடைக்கும். மத்திய பாரத்திலுள்ள சகல இடங்களுக்கும் மின்சாரம் கிடைத்துவிடும்.

புதிய நாணய முறைதான் சிறந்ததாம்!

இப்போதைய நாணய முறை குழப்பமுண்டாக்குகிறதாம்!

மாற்றம் ஏற்படுவதில் பல சிக்கல்கள் உண்டாம்

புதிய நாணயங்களை எந்தத் தேதி முதல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்ற பிரச்சினை கிளம்பியுள்ளது.

போதிய அளவு அச்சிடப்பட்டு, நாடு முழுமையிலும் பலவிடங்களிலும் வினியோகத்துக்குத் தயாராக வைக்கப்பட்டிருந்தாலொழிய, புதிய நாணய முறையை அமுலுக்குக் கொண்டுவருவது முடியாத காரியமாம்.

எப்போது அமுலாகும்?

பல காரணங்களை முன்னிட்டுப் புதிய நாணயங்களின் புழக்கம் ஒரு நிதி ஆண்டுத் தொடக்கத்தில்தான் ஆரம்பிக்கப்படலாம்; இந்த வகையில் மிகவும் முற்கூட்டிய சாத்தியமான நாள் 1957 ஏப்ரல் 1-ந் தேதிதானும்! எனவே, அந்தத் தேதியைத்தான் இத்திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர இலட்சிய தினமாக சர்க்கார் நிர்ணயித்துள்ளார்களாம்!

முன்னேறாத முயற்சி

தசாம்ச நாணயமுறையை இந்நாட்டில் நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு இதற்கு முன்னர் எவ்வளவோ தடவைகள் முயற்சிகள் நடத்தப்பட்டன; ஆனால் அவைகள் அதிகம் முன்னேறவில்லை

உங்களுக்குத் தெரியுமா?

ரூபாய் 100 'யூனிட்'களாகப் பாகுபடுத்தப்பட்டு, ஒவ்வொரு 'யூனிட்'டும் 'நயா பைசா'வென்று வழங்கப்படும்; ஆகவே, அரை ரூபாய் 50 'நயா பைசா'வுக்கும் கால் ரூபாய் 25 'நயா பைசா'வுக்கும் ஈடாக இருக்கும்.

இதனால், எழுதப் படிக்கத் தெரியாத மக்களுக்குச் சிறிது சிரமம் ஏற்படுமென்றாலும்கூட, இதைச் சமாளித்துவிட முடியுமாம்.

நாணயங்களின் உருவம், அளவு முதலியன மாறுபட்டிருக்குமாகையால் இதனால் கெடுதல்கள் ஏற்படாவண்ணம் தடுத்துவிடக்கூடுமாம்.

புதிய ஏற்பாட்டின்கீழ் இப்பொழுதுள்ள இரண்டணா ஒரு அணா, அரையணா, காலணாவுக்கு ஈடான நாணயங்கள் இருக்கமாட்டா; இவற்றுக்குப் பதிலாக இதே வரிசைக்கிரமத்தில் 10 பைசா, 5 பைசா, 2 பைசா, ஒரு பைசா நாணயங்களிருக்குமாம்.

பின்னர், முகத்தல் அளவை, நிறுத்தல் அளவைகளிலும் மெட்ரிக் முறை வருவதற்கேற்ற வகையிலும் இந்த நாணயங்கள் உருவகப்படுத்தப்படுமாம்.

புதிய நாணய முறையில் அணா நாணயம் மறைந்துவிடும்; இதைத் தவிர வேறு வழியில்லையாம். இதை மேலும் வைத்திருப்பதால் வெறும் குழப்பம்தான் விளையுமென்றும், துஷ்பிரயோகத்துக்கும் வழியேற்படக்கூடுமென்றும், கூடுமானால் பின்னர் காலப்போக்கில் 5 'நயா பைசா' நாணயத்தை 'அணா'வென்று அழைக்கலாமென்றும் கூறப்படுகிறது.

சுலபமான காரியமா?

இப்பொழுதுள்ள நாணயங்களுக்குப் பதிலாக பலவித மதிப்புகள் கொண்ட பல புதிய நாணயங்களைப் புழக்கத்துக்குக் கொண்டு வருவதென்பது சுலபமான காரியமல்ல. புதிய நாணயங்கள் பல வகைப்பட்டவைகளும் கோடிக்கணக்கில் அச்சடிக்கப்பட்டு நாணயங்கள் அதிக அளவில் உபயோகிக்கப்படும் பிரதம இடங்கள், கஜானாக்கள், அஞ்சல் நிலையங்கள், இரயில்வே நிலையங்கள், பாங்கிகள் முதலியவற்றுக்கு நாடு முழுமையும் அனுப்பப்பட வேண்டும்.

பழைய நாணயங்களை ஏககாலத்தில் படிப்படியாகத் திரும்பப் பெறப்படுவதற்கும் வகை செய்ய வேண்டும்; எந்தச் சமயத்திலும், திரும்பப் பெறப்படும் நாணயங்களின் எண்ணிக்கை, புதிதாகப் புழக்கத்துக்குக் கொண்டு வரப்படும் நாணயங்களின் எண்ணிக்கையைவிட அதிகமாக ஆகி, நாணயத் தட்டுப்பாடு ஏற்படாத வகையில் காரியங்கள் நடத்தப்பட வேண்டும். போதிய நாணயங்கள் ஆங்காங்கு இருப்பு வைக்கப்பட வேண்டும்; பழைய நாணயங்கள் செலாவணியிலிருந்து மறைதலும், புதிய நாணயங்கள் பழக்கத்துக்கு வருவதுடன் எவ்விதச் சிரமும் தொந்தரவின்றி நடைபெற வேண்டும்.

பிரச்சினையின் எல்லை

இந்த மாறுதலினால் தபால், தந்தி இலாகாவினர் எவ்வளவோ பிரச்சினைகளைச் சமாளிக்கவேண்டியிருக்கும்; இவைகளுக்குப் பரிகாரங்கள் காண்பது அவ்வளவு எளிதல்ல; வீண்போகாமல் தடுப்பதற்காகக் கூடியமட்டும் முன்கூட்டியே இப்பொழுதுள்ள மதிப்புகளில் 'தபால் பில்லை'கள் புதிதாக அச்சிடப்படுவது நிறுத்தப்படவேண்டும்; புதிய மதிப்பு கொண்ட 'ஸ்டாம்பு'கள் போதிய அளவு அச்சிடவும் வழிசெய்ய வேண்டும். அஞ்சல் நிலையங்களில் புதிய ஸ்டாம்பு'களை இருப்பு வைக்கவும், பழைய தபால் பில்லைகளைத் திரும்பப் பெறவும், பின்னர் அவற்றைக் கொளுத்திவிடவும் விவரமான திட்டம் கவனமாகத் தயாரிக்கப்பட வேண்டும். இப்பொழுதுள்ள ஸ்டாம்பு'கள் குறிப்பிட்ட கால அளவுக்குப் பின்னர் செல்லமாட்டாவென்பதுபற்றி பொதுமக்களுக்கு முன்கூட்டியே போதுமான எச்சரிக்கை செய்யப்பட வேண்டும்.

இதேபோல் இரயில்வேக்களும் பல பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டி ஏற்படும். பிரயாணிகள், சரக்குகள் போக்குவரத்துக் கட்டணங்களைப் புதிய நாணயங்களுக்கேற்பத் திருத்தியமைக்க வேண்டும். இது எவ்வளவோ சிக்கலான வேலை. புதிய வழிவகைகள், கட்டண நிர்ணயங்கள் பொதுமக்களைப் பாதிக்காமலும், நிர்வாகத்துக்கு நஷ்டம் விளைவிக்காத வகையிலும் வெகு நுட்பமாக ஆராயப்பட்டு நிர்ணயிக்கப்பட வேண்டும்; பளு ஏறவேண்டுமானல், அதைத் தாங்கக்கூடியவர்கள் மீது ஏற்ற வேண்டும்.

இதேபோல், சர்க்கார் போக்குவரத்து நிறுவனங்களும், தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான போக்குவரத்து நிறுவனங்களும் சக்கவகையில் மாறுதல்கள் செய்ய வேண்டியிருக்கும்.

பாங்கிகளும் இது சம்பந்தமாகத் தாங்கள் செய்யவேண்டிய திருத்தங்கள் பற்றி முன்கூட்டியே யோசனை செய்து தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். புதிய பாரங்கள், கணக்குப் புத்தகங்கள் முதலியன அச்சிட வேண்டும்; அச்சுத் தொழிலாளர்களுக்கு அதிக வேலை கிடைக்கலாம். இந்த சந்தர்ப்பத்தை அச்சகத்தினர் பெரும் இலாபம் சம்பாதிக்கப் பயன்படுத்த மாட்டார்கள் என்று நம்பப்படுகிறது.

யோசனை கூறுகின்றனர்!

இந்த மாறுதல் இலேசான காரியமல்ல என்பது தெளிவு. இதனால் பாதிக்கப்படுபவர்கள் யாவரும் இதனாலெழும் பிரச்சினைகள் பற்றி ஆர அமர நன்கு சிந்தித்து இவற்றைச் சமாளிப்பதற்கான வழிவகைகளைப் பின்பற்ற வேண்டுமாம். ஆனால், அவரவர்கள் தங்கள் தங்கள் துறையில் சிக்கல்களை

(2-ம் பக்கம் பார்க்க)

மைசூர் இணைப்பு எதிர்ப்பு மாநாடு

கட்சிக் கட்டளையை மீறி காங்கிரஸ் எம்.எல்.ஏ-க்கள் பங்கு பெற்றனராம்

மாந்தியா, ஜன. 1—

'மைசூர் தனி மாநிலமாகவே இருக்க வேண்டும் — கர்நாடகத்துடன் இணையக்கூடாது' என்று கோரும் இயக்கத்தவர் நடத்தும் மைசூர் இணைப்பு எதிர்ப்பு மாநாட்டில், மைசூர் சட்டசபை காங்கிரஸ் உறுப்பினர்கள் 10 பேர் வரை கலந்துகொண்டிருக்கின்றனர்.

அவர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டதின் மூலம், மைசூர் பிரதேச காங்கிரஸ் தலைவரின் உத்தரவை மீறி நடந்துகொண்டுவிட்டனராம்.

கடந்த கிழமையில் மைசூர் காங்கிரஸ் தலைவர் சென்னையா, அகில இந்திய காங்கிரஸ் செயலாளரின் அதிகாரம் பெற்று, மைசூர் இணைப்பு எதிர்ப்பு மாநாட்டில் காங்கிரசார் கலந்துகொள்ளக் கூடாது என்று உத்தரவு பிறப்பித்தார்.

மைசூர் தனியாக இருக்க வேண்டுமென்று வற்புறுத்தும் எந்த ஒரு நடவடிக்கையிலும் காங்கிரசார் பங்குபெறக்கூடாது என்றும், மைசூர் காங்கிரஸ், அகில இந்திய காங்கிரஸ் செயற் குழு மைசூர் சட்டசபை ஆகியவை, மைசூர் இணைந்த கர்நாடகம் அமைப்பது என்று முடிவு செய்துவிட்டதாகவும் அவர் உத்தரவில் சுட்டிக் காட்டியிருந்தார்.

என்றாலும், இந்தக் கட்சிக் கட்டளையை மீறி 10 காங்கிரஸ் எம்.எல்.ஏ-க்களும், பல காங்கிரஸ் பிரமுகர்களும் மாநாட்டில் கலந்துகொண்டிருக்கின்றனர்.

நெல்லை மாவட்ட தி. மு. க. நிர்வாகிகட்கு

"8—1—56 காலை 9 மணிக்கு, நெல்லைச் சந்திப்பு, நெடுஞ்சாலை தபால் அலுவலகத்திற்கு எதிர்ப்புறமுள்ள மாடியில், நெல்லை மாவட்ட தி. மு. கழக நிர்வாகக் குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது, பொதுக்குழுவுக்கு ஒரு உறுப்பினர் தேர்வும், மற்றும் சில முக்கியமான பொருள்கள் குறித்தும் ஆலோசிக்கப்படும்,"

என்று, நெல்லை மாவட்ட தி. மு கழகச் செயலாளர் தோழர் கே. வி. கே. சாமி அறிவிக்கிறார்.

தி. மு. கழக நிர்வாகிகளுக்கு

★

தற்போதுள்ள சழக சட்ட திட்டங்களைத் திருத்தி புத்தக வடிவில் வெளியிட ஆவன செய்யப்பட்டுவருவதால், சட்ட திட்டப் புத்தகம் அனுப்புமாறு கடிதம் வரைந்துள்ள கிளைகளுக்கு உடன் அனுப்ப இயலவில்லை. எனவே, அப்பணி முடிந்ததும் சட்ட திட்டப் புத்தகம் அனுப்பிவைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேம்.

என். வி. நடராசன்,
துணைப் பொதுச்செயலாளர்.
தி. மு. கழகம்

ஏஜண்டுகள் தேவை

★

கீழ்க்காணும் ஊர்களில் 'நம் நாடு' இதழை விற்பனை செய்ய முன் பணம் கட்டக்கூடிய பொறுப்புவாய்ந்த ஏஜண்டுகள் தேவை :—

ஈரோடு
திருவண்ணமலை
திண்டிவனம்
தஞ்சாவூர்
மாயவரம்
சாத்தூர்

திருக்குறள் வகுப்பு

4—1—56 மாலை 6 மணிக்கு, சென்னை—புரசைப்பாக்கம், எண் 100 வேளாளர் தெரு தொண்டை மண்டல வெள்ளாளர் சங்கத்தில் தோழர் க. அன்பழகன் அவர்கள் திருக்குறள் வகுப்பு நடத்துவார்.

இரயில்வேயில் நெருக்கடி தீராது?

அதிக இரயில் பாதைகள் அமைப்பதற்கு இயலாது ?

புதுடில்லி, ஜன. 2—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், இரயில்வே அபிவிருத்தி வேலைகளுக்காகக் கோரப்பட்ட ரு 1,480 கோடியை ரு. 1,125 கோடியாகத் திட்டக் குழு குறைத்துவிட்டதால், அடுத்த திட்டக் காலத்தில் 850 மைல்களுக்கு மேல் புதிய இரயில் பாதைகள் அமைப்பதற்கு இயலாதென்று இரயில்வே இலாகா கருதுவதாகக் கூறப்பட்டுள்ளது.

அதிகப்படியான உருக்கு, நிலக்கரி போக்கு-வரத்துக்களைச் சமாளிப்பதற்காகவே புதிய பாதைகள் அமைக்க வேண்டும்; எனவே. இரயில்வேக்களில் தற்போதுள்ள கூட்ட நெருக்கடியைக் குறைக்கும் பிரச்சினை தீராத ஒன்றென்றே கூறப்படுகிறது.

ஈசல் இரயில்வே திட்டத்தில் 180 இலட்சம் டன் 'கூட்ஸ்' போக்கு-வரத்துக்கு வழிகோலப்பட்டிருந்தது; 34,900 மைலிலிருந்து 36,300 மைல்களாக இரயில் பாதை அமைப்பதற்கும், திட்ட முடிவில் 12,300 எஞ்சின்கள், 3,82,000 வாகன்கள், 22,000 பிரயாணி வண்டிகள் இருப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

நந்தனைச் சுட்டெரித்த தில்லையில் மீண்டும் புரளி!

இராகுகாலத்தில் பூட்டைத் திறக்க முடியவில்லையாம்!

சிதம்பரம் நடராசர், சிவகாமி சுந்தரி இருவரும் மார்கழித் திருவாதிரைத் தரிசனக் காட்சியை மக்களுக்குக் கொடுத்துக்கொண்டு சிற்சபையின் இருப்பிடம் செல்லுவதற்கு 29-ந் தேதி பகல் 1-மணிக்கு ஆயிரக்கால் மண்டபத்திலிருந்து புரப்பட்டு கனக சபைக்குள் சென்றார்கள்.

தீட்சிதர்கள், வியாழக்கிழமை 1-30 முதல் 3 மணிவரையில் இராகு காலம் இருப்பதைப் பொருட்படுத்தாது கனகசபையில் இறக்கப்பட்டிருந்த நடராசர், சிவகாமிசுந்தரியை சிற்சபைக்குள் கொண்டுபோய் வைப்பதற்கு முற்பட்டார்கள்.

அதுசமயம் சிற்சபையின்முன் உள்ள வெள்ளிக் கதவின் பூட்டு திறக்க முடியாது போய்விட்டது பூட்டைத் திறப்பதற்கு தீட்சிதர்கள் முயன்றும் முடியவில்லை இராகு காலம் முடிவுபெற்றவுடன் (பிற்பகல் 3 மணி அடித்தவுடன்) பூட்டைத் திறக்க முற்பட்டார்கள்; உடனே பூட்டு திறக்கப்பட்டுவிட்டது.

அதன் பிறகு சுமார் 1½ மணி நேரங்கழித்து கனகசபையிலேயே வீற்றிருந்த நடராசர், சிவகாமிசுந்தரியை சிற்சபைக்குள் எழுந்தருளச் செய்து இருப்பிடத்தில் வைத்தார்கள். அதன் பிறகுதான் பூசைகள் நடைபெற்றன (தநா.)

எஸ். ஆர். எம். யூ. தஞ்சாவூர் கிளைத் திறப்பு விழா

7—1—56 மாலை 6 மணிக்கு, தஞ்சாவூர், கீழவாசல் பழைய மாரியம்மன் கோவில் ரோடு, 4377/81 எண்ணுள்ள சட்டிட மேல் மாடியில், மத்திய சங்கத் தலைவர் தோழர் எஸ். இராகவானந்தம் தலைமையில் நடைபெறும்.

இந்தியாவின் இரண்டாம் திட்டம்

துண்டுவிழும் தொகையைச் சரிக்கட்ட மேலைநாடுகள் உதவும்?

புதுடில்லி, டிச 30 —

இந்தியாவின் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கான நிதி வழிகளில் சுமார் ரு. 800 கோடி துண்டுவிழுவதைச் சரிக்கட்ட அமெரிக்கா, பிரிட்டன், கனடா ஆகிய நாடுகள் ஒன்றுகூடி உதவ வேண்டும் என்பது குறித்து, இங்குள்ள மேலை நாட்டுத் தூதுவர்கள் ஒன்றுகூடி ஆலோசித்து வருவதாகத் தகவல் கிடைத்துள்ளது.

சூடானில் விடுதலை...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நின்ற எல்லா நாடுகளுக்கும் —குறிப்பாக, பிரிட்டன், எகிப்து, நாடுகளுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். எனது பாராட்டுதலைப் பெறும் சூடான் மக்களின் குலையாத உறுதி, இந்தச் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் என்று நம்புகிறேன்,

"வாக்கெடுப்பு நடத்தும் போது, மேற்பார்வை செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவில் அங்கம் வகிக்கும் ஏழு நாடுகளுக்கும் நன்றி தெரிவிக்கிறேன். மற்றும், தேர்தல் குழு, கவர்னர்-ஜெனரல் குழு இவற்றில் அங்கம் வகித்த இந்தியா, பாகிஸ்தான், அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்"

என்று, பிரதமர் அஜாரி, சுதந்திரக் கொடியேற்றலுக்குப் பின் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவரும் எதிர்க்கட்சித் தலைவரும் ஒன்றுகச் சேர்ந்து சுதந்திரக் கொடி ஏற்றினர்கள்.

பிரிட்டன், எகிப்தியக் கொடிகள், அந்த நாட்டுத் தூதுவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட சம்பவம், கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாகச் சூடானில் நடைபெற்று வந்த ஆங்கிலோ—எகிப்தியக் கூட்டாட்சி ஒழிகிறது என்பதைக் குறித்தது.

சூடானில் அராபியர்களும், நீக்ரோவருமாக சுமார் 90 இலட்சம் பேர் வாழ்கின்றனர்.

சூடான் மக்கள் சபை, கடந்த டிசம்பர் 19-ந் தேதியன்று சுதந்திரத் தீர்மானத்தை நிறைவேற்றிற்று. உடனே பிரிட்டனும், எகிப்தும் அதனை அங்கீகரித்தன.

'நல்வாழ்வும் வேண்டாம்; பிறந்த இடத்தை பிரியவும் முடியாது'

'இருந்த இடத்தில் இல்லாமையில் இடர்படுவதையே விரும்புகிறேம்'

'உங்கள் ஆசிரியர்களைக் கண்டு எங்கள் சிறுர்கள் அஞ்சுகிறர்கள்'

மந்திரியிடம் மலை மக்களின் பிடிவாதம்

கோவை, ஜன. 1—

'மலை வாழ் மனிதர்கள்' என்ற பழங்குடி மக்கள் கோவை ஆனைமலைப் பகுதியில் சுமார் 150 பேர் வரை வசிக்கின்றனர்.

அவர்களை மந்திரி பக்தவத்சலம் சந்தித்து, வேறு இடங்களில் குடியேறினல் நல்ல வசதிகளுடன் கூடிய வாழ்வு தருவதாகக் கூறினர்; ஆனல், அவர்களோ, 'நாங்கள் இருக்கும் இடத்திலேயே இருந்து இடர்பட்டுக் கொண்டே வாழ்ந்து கொள்கிறேம்; வேறு இடத்தில் குடியேற மாட்டோம்,' என்று மறுத்துவிட்டிருக்கின்றனர்.

உடன் சென்றிருந்த முதன் மந்திரி, அவர்கள் வசிக்கும் வீடுகளைப் பார்வையிட விரும்பினர். வீடுகளைப் பார்த்த பின் அந்த மக்களிடம் அவர், 'உங்கள் "குழந்தைகளை அருகில் உள்ள பள்ளிக்கு அனுப்புங்கள்' என்று கூறியிருக்கிறர்; இதற்கு அவர்கள், 'உங்கள் ஆசிரியர்களைக் கண்டு எங்கள் குழந்தைகள் பயப்படுகின்றனர்; என்னதான் நீங்கள் எடுத்துக் கூறினலும் நாங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பமாட்டோம்' என்று கூறிவிட்டனர்.

மிகப் பழமையான ஆசார வேறி கொண்ட இந்த மலை மக்கள், வாழ்நாளில் ஒருமுறை கூடக் குளித்தது இல்லை. என்றும், ஓடை நீரைத்தான் குடிப்பது வழக்கம் என்றும், குடிசைகளைச் சுத்தப்படுத்துவதற்குப் பசுஞ் சாணத்திற்குப் பதிலாக ஆட்டுப் புழுக்கைகளையே உபயோகிக்கின்றனர் என்றும் அதிகாரிகள் கூறுகின்றனர்.

பி ஜி. கேர் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள அரசாங்க மொழிக் குழு இம்மாதம் 9-ந் தேதி முதல் 12-ந் தேதி வரையில் சென்னையில் விசாரணை நடத்தும். 13-ந் தேதி முதல் 15-ந் தேதி வரையில் பெங்களூரிலும், 16 17-ந் தேதிகளில் எர்ணுகுளத்திலும், 18, 19ந் தேதிகளில் திருவனந்தபுரத்திலும் விசாரணை நடத்தும்.

மாநில எல்லைத் தகராறுகள்

காங்கிரஸ் மேலிடம் வழி கூற வேண்டுமாம்

சென்னை, ஜன. 2—

'சென்னை—ஆந்திர மாநிலங்களிடையேயுள்ள எல்லைத் தகராறுகளைத் தீர்த்துக்கொள்வது பற்றி இருமாநிலங்களும் மீண்டும் கூடிப்பேசுவது, காங்கிரஸ் மேலிடம் இத்தகு எல்லைத் தகராறுகளை எந்த அடிப்படையில் தீர்த்துக்கொள்வது என்று முடிவு செய்த பின்பே சாத்தியமானதாயிருக்கும்"

என்று, ஆந்திர திட்ட மந்திரி காளா வெங்கட்ராவ் குறிப்பிட்டுள்ளார்.

'காங்கிரஸ் மேலிடம், காங்கிரஸ் உயர்தரக் குழு ஆகியவைகள் இது குறித்துக் கருத்தறிவித்த பின்பே, மீண்டும் பேச்சுவார்த்தை துவங்குவதா வேண்டாமா என்பது முடிவாகக்கூடும்' என்றும் அவர் கூறினர்.

கதிகளில் காவல் செய்துவரும் ஒரு பர்மிய போலீஸ் குழு. பாய்மரக் கப்பல்களில் போரிடவந்த 23 கம்யூனிஸ்டுகளைக் கொன்றதாகவும், கப்பலிலிருந்த ஏராளமான ஆயுதங்களைக் கைப்பற்றியதாகவும் செய்தி கிடைத்திருக்கிறது.

நவீன குடிசைத் தொழில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் 1,500 பெட்டிகள் தயாரித்துத் தரவேண்டுமென தன்னிடம் வியாபாரிகள் கேட்டிருப்பதாயும் அவர் கூறினர்.

தமது தொழிற்சாலையில் தயாராகும் இதர சாமான்கள் பற்றியும் அவர் விளக்கம் தந்தார்.

மந்திரி சுப்பிரமணியமோ, தொழில் இலாகா அதிகாரியை இது குறித்துப் பார்க்குமாறு தோழர் ஜி. டி. நாயுடுவிடம் கூறிவிட்டு, விழா ஒன்றில் கலந்துகொள்வதற்காக விரைந்து சென்றுராம்!

முகவரி மாற்றம்

க. அறிவழகன்
4, நாடார் காலனி,
தாண்டவராய கிராமணித் தெரு,
தண்டையார்பேட்டை,
சென்னை-21.

பள்ளி பெயர் மாற்றம்

1—1—56 முதல், சென்னை வில்லிவாக்கம் (கொண்ணூர்) டி. பி. எம். பள்ளி என வழங்கிவந்த இப்பள்ளியின் பெயர் இனி ஜான் காபிரேயல் துவக்கப் பள்ளி என வழங்கப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ